**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/S.S.SUBBURAJ ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F. NO.43/1A, 1B(P) & 45/1A1, 1A2(P), APPAYANAICKENPATTI VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 30.07.2024, 11.00 A.M AT M/S.PERUNTHALAIVAR KAMARAJAR THIRUMANA MAHAL, DOOR NO: 4/297, MELANMARAINADU VILLAGE, VEMBAKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT**

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1 | M.Sivakumar | : | Revenue Divisional Officer<br>Sattur,<br>Virudhunagar District. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 3 | D.M. Krishnababu | : | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |
| 4 | N.Kalaivani | : | Tahsildar,<br>Vembakottai Taluk.<br>Virudhunagar District. |
| 5 | V. Kalaijothi | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar District. |

Public, Project proponent 69 Nos (List enclosed)

The public hearing under EIA Notifications, 2006 for the proposed project of M/s.S.Subburaj Rough Stone and Gravel Quarry, S.F.No. 43/1A, 1B(P) & 45/1A1, 1A2(P), Appayanaickenpatti Village, Vembakottai Taluk, Virudhunagar District was held at M/s.Perunthalaivar Kamarajar Thirumana Mahal, Door No: 4/297, Melanmarainadu Village, Vembakottai Taluk, Virudhunagar District. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the Revenue Divisional Officer,

Sattur, other government officials, all general public and project proponents who have attended the public hearing. He informed that the public notices informing the conduct of Public Hearing was published in "Dinathanthi" and "The New Indian Express" on 19.06.2024. He also informed that wide publicity was given about the conduct of public hearing by circulating pamphlets in the nearby villages of the project site. Further, he stated that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. Subsequently, the District Environmental Engineer stated that the project proponent will make a detailed presentation on the proposed project and requested the public to express their views after completion of the presentation. He added that the written complaints would also be received.

Further he stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamilnadu.

The Revenue Divisional Officer, Sattur initiated the Public Hearing process. After that, the District Environmental Engineer requested the project proponent to explain about their proposed project.

Then, the Environmental consultant of the project has made detailed presentation on the project of M/s.S.Subburaj Rough Stone and Gravel Quarry to the public along with Environmental Management Plan.

After that, the public has furnished their views with respect to the project as follows –

**1.Thiru.Narayanaperumal Samy (Secretary, Tamil Nadu Quarry Association), Sivakasi**

He said that house is essential for people to live and he also said that rough stone and gravel are needed to build those houses. He also said that rough stone is being sold at the rate Rs.900 per unit. In this, 30% is levied towards seigniorage fund, 10% levied towards DMF Fund and 10% levied toward Green Fund and exisce tax. Also, appropriate GST is

also being levied. He said that all the 100% taxes are utilized for Appaiyanayakkanpatti village people. Hence, there is no harm due to the coming of this quarry and he supports this proposed quarry.

**2. Tmt.Parvathi (Kunnampatti)**

She said that, the establishment of this quarry is beneficial and there is no harm in this and she welcomed this project.

**3. Tmt.Amutha (Kunnampatti)**

She said that, here husband works at in this quarry and utilizing the salary from it for family expenses and study expenses and hence she also welcomed this project.

After that, since no one came forward to give view on the project, the Revenue Divisional Officer, Sattur invited the public to offer their further more views if any. Even after that, no one came forward to give any opinion. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted. He also thanked all and requested to furnish their views if any in written of petitions. No written petitions have been received about this project.

With this, the meeting came to the end.

2.8.2024

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Virudhunagar

Revenue Divisional Officer
Sattur,
Virudhunagar District.

**Enclosures:**

1. Copy of Attendance Register (Total 6 – pages, 69 persons)
2. Videograph of public hearing meeting (CD format)
3. Copy of Public Notices (both Tamil & English).

**விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், அப்பையநாயக்கன்பட்டி கிராமம், புல எண்கள்.43/1A, 1B(P) & 45/1A1, 1A2(P)-ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/எ்.S.சுப்புராஜ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 30.07.2024 முற்பகல் 11.00 மணியளவில் தி/எ்.பெருந்தலைவர் காமராஜர் திருமண மஹால், கதவு எண்.4/297, மேலாண்மறைநாடு கிராமம், வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**பங்கேற்றோர்:**

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.மு.சிவக்குமார், | : | வருவாய் கோட்டாட்சியர்,<br>சாத்தூர்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 2 | பொறி. கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 3 | பொறி.து.மு.கிருஷ்ணபாபு | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 4 | திருமதி.ந.கலைவாணி | | வட்டாட்சியர்,<br>வெம்பக்கோட்டை வட்டம்,<br>விருதுநகர் மாவட்டம். |
| 5 | செல்வி.வே.கலைஜோதி | : | உதவிப் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர் மாவட்டம். |

பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 69 நபர்கள்
(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

வெம்பக்கோட்டை வட்டம், அப்பையநாயக்கன்பட்டி கிராமம், புல எண்:43/1A, 1B(P) & 45/1A1, 1A2(P) -ல் உத்தேசிக்கப்பட்டுள்ள தி/எ்.S.சுப்புராஜ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக, பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/எ்.பெருந்தலைவர் காமராஜர் திருமண மஹால், கதவு எண்.4/297, மேலாண்மறைநாடு கிராமம், வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் 30.07.2024 முற்பகல் 11.00 மணியளவில் துவங்கியது. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள்

கூட்டத்திற்கு வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர், ஏனைய அரசு அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 19.06.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம், நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் எனக் கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் எனத் தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்தார்.

பிறகு, வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை துவக்கி வைத்தார். பின்பு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியைக் கேட்டுக்கொண்டு, அதன்பின் பொதுமக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

அதன்பின் தி/ள்.S.சுப்புராஜ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. திரு.A.நாராயணபெருமாள்சாமி, (தமிழ்நாடு குவாரி குத்தைகத்தாரர் சங்கத்தின் செயலாளர்), சிவகாசி

திரு.நாராயண பெருமாள்சாமி அவர்கள், பொதுமக்கள் வாழ்வதற்கு அத்தியவசியமாக வீடுகள் தேவைப்படுகிறது எனவும், அவ்வீடுகள் கட்ட உடைகல் மற்றும் ஜல்லிகள் தேவை இருப்பதாகவும் கூறினார். மேலும் உடைகல் 1 யூனிட் ரூ.900-க்கு விற்பனை செய்யப்படுவதாகவும், இதில் கனிம வரி (Seigniorage) 30 சதவீதம், மாவட்ட கனிம அறக்கட்டளை நிதி 10 சதவீதம், பசுமை மற்றும் சுங்கவரி 10 சதவீதம் மற்றும் GST வரிகளும் வசூல் செய்யப்படுவதாகவும் மற்றும் செலுத்தப்படுகின்ற வரிகளில் 100 சதவீதமும் அப்பையநாயக்கன்பட்டி கிராமத்திற்கு பயன்படுத்தப்படுவதாகவும் கூறினார். மேலும், இத்திட்டம் வருவதினால் எந்த பாதிப்பும் இல்லை எனக்கூறி இத்திட்டத்தினை ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்.

2. திருமதி.பார்வதி, குன்னம்பட்டி

திருமதி.பார்வதி அவர்கள், இக்குவாரி அமைவதினால் நன்மை எனவும், தீமை எதுவும் இல்லை எனக்கூறி இத்திட்டத்தினை வரவேற்பதாக கூறினார்.

3. திருமதி.அமுதா, குன்னம்பட்டி

திருமதி.அமுதா அவர்கள், எனது கணவர் இக்குவாரியில்தான் வேலை பார்ப்பதாகவும், அதிலிருந்து வரும் ஊதியத்தை வைத்து குடும்ப செலவு மற்றும் படிப்பு செலவிற்கு பயன்படுவதாகக் கூறி இத்திட்டத்தினை வரவேற்பதாக கூறினார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக் கூற வேறு யாரும் முன்வராததால், வருவாய் கோட்டாட்சியர், சாத்தூர் அவர்கள், மேலும் கருத்துகள் ஏதும் இருக்கிறதா என்று வினவினார். அதன் பின்பும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் ஏதும் வரவில்லை. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் இதுவரை நடந்ததை தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும்

நன்றி கூறினார். மேலும், எழுத்துப் பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் இருப்பினும் வழங்கலாம் எனத் தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக எழுத்துப்பூர்வமான கருத்துக்கள்/மனுக்கள் ஏதும் பெறப்படவில்லை.

அத்துடன் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவுபெற்றது.

2.8.2024

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

வருவாய் கோட்டாட்சியர்,
சாத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

இணைப்புகள்:

1. வருகைப்பதிவேடுநகல் (மொத்தம் - 6 பக்கங்கள், 69 நபர்கள்)
2. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).